**C–AVZ–O–UNLA**

# TAMIL
## Paper–I
## (Literature)

CS (Main) Exam:2015

*Time Allowed : Three Hours* | *Maximum Marks : 250*

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions:**

There are **EIGHT** questions divided in **Two Sections.**

Candidate has to attempt **FIVE** questions in all.

Question no. 1 and 5 are compulsory and out of the remaining, **THREE** are to be attempted choosing at least **ONE** from each Section.

The number of marks carried by a question / part is indicated against it.

Answers must be written in **TAMIL.**

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the answer book must be clearly struck off.

---

## SECTION – A

Q.1. **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக :—** **10×5=50**

Q.1(a) தமிழில் கால இடை நிலைகள். 10

Q.1(b) தொல்காப்பிய அகம், புறம் திணைகளின் பொருத்தம். 10

Q.1(c) உலா இலக்கியத்தின் சிறப்புக் கூறுகள். 10

Q.1(d) தமிழில் புதுக்கவிதை வளர்ச்சிப் போக்கு. 10

Q.1(e) சமூகக் கிளை மொழி வழக்கு. 10

Q.2. **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கம் முதல் நான்கு பக்கம் அளவிற்கு மிகாமல் விடை எழுதுக :—**

Q.2(a) திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழின் முதன்மை குறித்து கட்டுரை வரைக. 15

Q.2(b) சங்க இலக்கிய மொழிக்கட்டமைப்பைத் தொல்காப்பியம் வழி நிறுவுக. 15

Q.2(c) இக்கால இலக்கிய வளர்ச்சிக்கான அரசியல் சமூகக் காரணிகளை ஆராய்க. 20

**Q.3.** **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கம் முதல் நான்கு பக்கம் அளவிற்கு மிகாமல் விடை எழுதுக :—**

Q.3(a) பல்லவர் காலத் தமிழ் மொழிநடை குறித்து கட்டுரை வரைக. 15

Q.3(b) சங்க இலக்கியம் சமயச் சார்பற்றது என்னும் கருத்தைச்சீர்த்தூக்கி ஆய்க. 20

Q.3(c) இக்கால இலக்கியத்தில் அரசியல் கொள்கைகளின் தாக்கங்களை ஆராய்க. 15

**Q.4.** **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கம் முதல் நான்கு பக்கம் அளவிற்கு மிகாமல் விடை எழுதுக :—**

Q.4(a) தமிழில் பேச்சு வழக்கும், எழுத்து வழக்கும், ஒலிப்புமுறை, சொற்கள், தொடரியல் நிலைகளில் வேறுபட்டுள்ள இரட்டை வழக்கு முறைகளுக்குரித்தான காரணிகளை ஆய்ந்துரைக்க. 20

Q.4(b) 'சிலம்பும் மேகலையும் புரட்சிக் காப்பியங்கள்' இக்கருத்தின் வன்மை மென்மைகளை விவரிக்க. 15

Q.4(c) தமிழில் புதினங்கள் சமூக மாற்றங்களைப் புனைவதில் வெற்றி பெற்றுள்ளனவா? ஆராய்க. 15

## SECTION – B

**Q.5.** **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக :—**

**10×5=50**

Q.5(a) தமிழில் குறியீட்டியல். 10

Q.5(b) தமிழில் கதைப்பாடல்கள். 10

Q.5(c) பழந்தமிழரின் வழிபாட்டு முறைகள். 10

Q.5(d) விடுகதைகளின் பண்பும்பயனும். 10

Q.5(e) பல்லவர் காலக்கட்டடக் கலை. 10

**Q.6.** **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கம் முதல் நான்கு பக்கம் அளவிற்கு மிகாமல் விடை எழுதுக :—**

Q.6(a) இலக்கியத் திறனாய்வில் சமூகவியல் திறனாய்வின் தேவையும் பயனும் பற்றி விவாதிக்க. 15

Q.6(b) நாட்டுப்புறப் பழமொழிகள் வெளிப்படுத்தும் சமூகச் சிந்தனைகளைத் தெளிவு செய்க. 20

Q.6(c) சமணமும் பௌத்தமும் தமிழ் மொழிக்கு ஆற்றிய இலக்கியப் பங்களிப்பினை மதிப்பீடு செய்க. 15

Q.7. **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கம் முதல் நான்கு பக்கம் அளவிற்கு மிகாமல் விடை எழுதுக :—**

Q.7(a) தமிழ்ப் பண்பாட்டின் ஒழுகலாறுகளை அகத்திணைக் கோட்பாடுகள் புலப்படுத்தும் பாங்கினை ஆராய்க. 15

Q.7(b) தமிழில் இதழியல் வளர்ச்சி சமூக அக்கறையோடு வளர்ந்துள்ளதா? விவாதிக்கவும். 15

Q.7(c) பிற்காலச் சோழர்கள் கட்டட, சிற்பக் கலைகளுக்கு ஆற்றிய அரும்பணியைச் சான்றுகளுடன் நிறுவுக. 20

Q.8. **பின்வரும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கம் முதல் நான்கு பக்கம் அளவிற்கு மிகாமல் விடை எழுதுக :—**

Q.8(a) தமிழ் மொழியின் வளர்ச்சிப் பாதையில் பிறமொழி நூல் பெயர்ப்புகளின் பங்கினைச் சான்றுகளுடன் நிறுவுக. 15

Q.8(b) தொல்காப்பியர் கூறும் உள்ளுறை, இறைச்சி இவை இரண்டையும் ஆராய்ந்து எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக. 20

Q.8(c) தமிழ்ச் சமூகத்தின் மீதான சமூகப் பண்பாட்டு அரசியல் இயக்கங்களின் தாக்கத்தை ஆராய்க. 15